# <u>சார்பு நீதிமன்றம், ஓமலூர், சேலம் மாவட்டம்</u>

**முன்னிலை: திருமதி. த. மாலதி, பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, ஓமலூர்.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் நாள் திங்கட்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 16ம் நாள்)

**<u>இந்து திருமண அசல் மனு எண்: 11/2026</u>**
**<u>CNR No.TNSA19-000672-2026</u>**

குமரேசன் ...மனுதாரர்

/எதிராக/

பிரியதர்ஷினி ...எதிர்மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக என் முன்பாக கொண்டுவரப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் Thiru.K.Eswaran அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் Thiru.R.Senthilkumar அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு மனு சங்கதிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்து இந்நீதிமன்றம் இன்று வழங்கும்

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 08.09.2024ம் தேதியன்று சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கச்சுப்பள்ளியில் உள்ள ஸ்ரீ செல்லியம்மன் திருக்கோவிலில் சாதி, குல வழக்கப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவு செய்யக் கோரி இந்து திருமணச் சட்டம் 1955 பிரிவு 13(1) (ia)-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்.-**

மனுதாரரும் எதிர்மனுதாரரும் கணவன் மற்றும் மனைவி ஆவார். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 08.09.2024ம் தேதியன்று சேலம் மாவட்டம்,

எடப்பாடி வட்டம், கச்சுப்பள்ளியில் உள்ள ஸ்ரீ செல்லியம்மன் திருக்கோவிலில் சாதி, குல வழக்கப்படி திருமணம் நடைபெற்றிருக்கிறது. திருமணத்தின் பயனாக இருவருக்கும் குழந்தை இல்லை. திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து மனுதாரரும் எதிர்மனுதாரரும் இடையே கடுமையான கருத்து வேறுபாடுகள் நிலவியதால், மன ஒற்றுமையின்றி வாழ்ந்து வந்திருக்கிறார்கள். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் பலமுறை இருவரையும் சமரசப்படுத்த முயன்றும், அந்த முயற்சிகள் பலனிக்கவில்லை. இதனால் திருமண உறவை தொடர முடியாத நிலை உருவாகி, மனுதாரர் திருமண பந்தத்தை முறித்துக்கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலைக்கு ஏற்பட்டிருக்கிறது.

மேலும், மனுதாரரும் எதிர்மனுதாரரும் 20.03.2025 முதல் தனித்தனியாக வாழ்ந்து வருகின்றார்கள். மனுதாரரும் அவரது பெற்றோரும் மற்றும் ஊர் பஞ்சாயத்தாரும் எதிர்மனுதாரரின் இல்லத்திற்கு சென்று, மனுதாரருடன் சேர்ந்து வாழுமாறு கேட்டபோது, எதிர்மனுதாரர் தமக்கு மனுதாரருடன் வாழ எந்தவித விருப்பமும் இல்லை என்றும், விரும்பினால் விவாகரத்து பெறிக் கொள்ளலாம் என்றும் தெரிவித்திருக்கிறார். மேலும், திருமணத்தின் போது இருவரும் பரிமாறிக் கொண்ட தனிப்பட்ட பொருட்கள் அவரவர் வசம்தான் உள்ளன. மனுதாரரும் எதிர்மனுதாரரும் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்கான எந்தவித சாதகமான சூழ்நிலையும் இல்லை. இனிமேல் இருவரும் இணைந்து வாழ்ந்தால் வாழ்க்கை சீராக இருக்காது என்பது தெளிவாகியுள்ளது. ஆகையால், மனுதாரர் தனது எதிர்கால நலனை கருத்தில் கொண்டு, எதிர்மனுதாரருடன் இணைந்து வாழ முடியாது என்ற உறுதியான நிலைப்பாட்டிற்கு வந்துள்ளார். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்யக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவின் சுருக்கம்</u>.–

மேற்படி மனுவில் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்ளும் ஒரு சில சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளும் பொய்யானதும், உண்மைக்கு புறம்பானதுமாகும். மேலும்,

சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லாததாகும். இந்த மனுவானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. எதிர்மனுதாரர் தனது மற்றும் மனுதாரின் எதிர்கால வாழ்க்கை நலனை கருத்தில் கொண்டு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் ஒரு சில சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை முற்றிலுமாக மறுத்துரைத்து விவாகரத்து மனுவினை செலவுத்தொகையின்றி அனுமதிப்பதில் இந்த எதிர்மனுதாரருக்கு எந்வொரு ஆட்சேபனையில்லை இல்லையென்று என்று எதிருரை எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவெனில்:–**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையேயான திருமண பந்தம் ரத்து செய்யத்தக்கதா? என்பதேயாகும்.

5. மனுதாரர் தரப்பில் மனுதாரர் குமரேசன் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, திருமண அழைப்பிதல் ம.சா.ஆ.1 ஆகவும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரின் ஆதார் அட்டை ம.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் பழனிசாமி எ.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் ஆதார் அட்டை எ.ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>பிரச்சனைக்கான தீர்வு</u>**

6. மனுதாரர் தரப்பு வாதுரையில், திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து மனுதாரரும் எதிர்மனுதாரரும் இடையே கடுமையான கருத்து வேறுபாடுகள் நிலவியதால், மன ஒற்றுமையின்றி வாழ்ந்து வருவதாகவும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் பலமுறை இருவரையும் சமரசப்படுத்த முயன்றும், அந்த முயற்சி பலனிக்கவில்லை என்றும், எனவே இனிமேற்கொண்டு இருவரும் இணைந்து வாழ்ந்தால் வாழ்க்கை சீராக இருக்காது என்றும், எனவே மனுதாரர் தனது எதிர்கால நலனை கருத்தில் கொண்டு, எதிர்மனுதாரருடன் இணைந்து வாழ முடியாது என்ற உறுதியான நிலைப்பாட்டிற்கு வந்துள்ளதாகவும், எனவே, திருமணத்தை ரத்து செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் வாதம்

எடுத்துரைக்கப்பட்டது.

7. அதற்கு மாறாக எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரும், எதிர்மனுதாரரும் கருத்து வேறுபாட்டினால் பிரிந்து வாழ்ந்து வருவதால் இனிமேற்கொண்டு சேர்ந்து வாழ இயலாத சூழ்நிலை உருவாகி உள்ளதால், மனுதாரர் கோரியுள்ளவாறு விவாகரத்து வழங்க எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும் வாதம் எடுத்துரைக்கப்பட்டது.

8. மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை தான் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் கூறியுள்ளார். ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "எதிர்மனுதாரர் மீது குறியுள்ள குற்றச்சாட்டுக்களை தவிர்த்துவிட்டு விவாகரத்து பெற எதிர்மனுதாரர் சம்மதிக்கிறார் என்றால் ஒப்புக்கொள்கிறேன் என்று சாட்சியம் அளித்திருக்கிறார். எதிர்மனுதாரர் அவரது குறுக்கு விசாரணையில் மனுதாரர் மீது கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை தவிர்த்துவிட்டு விவாகரத்து பெற சம்மதிக்கிறார் என்றால் ஏற்றுக்கொள்கிறேன் என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார்.

9. இருதரப்பும் கேட்கப்பட்டு இம்மனுவின் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் முன்னிலைப்படுத்தியுள்ள வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலிக்கையில் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 08.09.2024ம் தேதியன்று சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கச்சுப்பள்ளியில் உள்ள ஸ்ரீ செல்லியம்மன் திருக்கோவிலில் திருமணம் நடைபெற்றது என்பதும், திருமணத்திற்கு பின்னிட்டு, மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன் மனைவியாக எதிர்மனுதாரரின் வீட்டில் சில மாதங்கள் குடும்பம் நடத்தி வந்துள்ளார்கள் என்பதும் தெரியவருகிறது.

மேலும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் எதிர்காலத்தில் சேர்ந்து வாழக்கூடிய வாய்ப்பில்லை என்றும், இருதரப்பினரும் விவாகரத்துக் பெற்றுக் கொள்வதற்கு சம்மதம்

தெரிவிப்பதாகவும், இருதரப்பிலும் இனிமேற்கொண்டு சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்பதால் இருவரும் பிரிந்து விடுவதாக ஒப்புக்கொண்டு மனுதாரரும் , எதிர்மனுதாரரும் சாட்சியம் அளித்திருப்பதாலும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் எதிர்கால வாழ்க்கை நலனை கருத்தில் கொண்டும் மனுதாரர், எதிர்மனுதாரர் கோரியவாறு விவாகரத்து வழங்கி உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 08.09.2024ம் தேதியன்று சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கச்சுப்பள்ளியில் உள்ள ஸ்ரீ செல்லியம்மன் திருக்கோவிலில் சாதி, குல வழக்கப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்க இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்/-த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.

<u>**மனுதாரர் தரப்பு சாட்சிகள்.-**</u>

மசா.1 - குமரேசன் (மனுதாரர்)

<u>**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.-**</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | 08.09.2024 | திருமண அழைப்பிதழ் | அசல் |
| 2. | ம.சா.ஆ.2 | - | மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் | அசல் |
| 3. | ம.சா.ஆ.3 | - | மனுதாரரின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்.-**</u>

எ.மசா.1 – பிரியதர்ஷினி (எதிர்மனுதாரர்)

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.–**</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எ.ம.சா.ஆ.1 | – | எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.